பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**16 06 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு ஸ்லோவேக்கியாவின் உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது.

2. குடிமைப் பணிக்கான முதல்நிலை தேர்வு முடிவுகளை மத்திய குடிமைப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ளது.

3. நீட் மறுதேர்வுக்கான உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

4. அமெரிக்கா - ஈரான் இடையேயான அமைதி ஒப்பந்தம் முறைப்படி ஸ்விட்சர்லாந்தின் ஜெனிவாவில் வரும் 19ஆம் தேதி கையெழுத்தாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

5. உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் பெல்ஜியம் - எகிப்து மற்றும் சவுதி அரேபியா - உருகுவே அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு ஸ்லோவேக்கியாவின் உயரிய விருதான “The Order of the White Double Cross, First Class” என்ற விருதை அந்நாட்டு அதிபர் திரு. Peter Pellegrini வழங்கினார்.

இந்த விருதை ஏற்றுக்கொண்ட பிரதமர், இந்தியா - ஸ்லோவேக்கியா இடையேயான நட்புறவை இந்த விருது உறுதி செய்வதாகவும், இது 140 கோடி இந்திய மக்களின் கௌரவம் என்றும் தெரிவித்தார்.

இவ்விருது இந்தியா - ஸ்லோவேக்கியா மக்களை ஒன்றிணைக்கும் நம்பிக்கை, அன்பு ஆகியவற்றுக்கான சான்று என்று பிரதமர் கூறினார்.

இந்த கௌரவம் இரு நாடுகளிலும் எதிர்கால தலைமுறையினர் தங்களுடைய நட்பை தொடர்ந்து வளர்க்க ஊக்குவிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஸ்லோவேக்கியா நாட்டின் உயரிய விருது பெற்றுள்ள திரு. நரேந்திர மோடிக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், உலகளவில் பிரதமர் பெற்றுள்ள 33வது விருது என்றும், இது இந்தியாவின் உலகளாவிய தலைமைத்துவத்திற்கான ஆதாரமாக உள்ளது என்றும் கூறியுள்ளார்.

<<<<>>>>

குடிமைப் பணிக்கான முதல்நிலை தேர்வு முடிவுகளை மத்திய குடிமைப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ளது.

இதன் மூலம் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் முதன்மைத் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இறுதித் தேர்வு முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் மதிப்பெண்கள், கட்-ஆஃப் மதிப்பெண்கள், விடைக்குறிப்பு ஆகியவை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் என்று UPSC தெரிவித்துள்ளது.

முதல்நிலை தேர்வு முடிவுகளை upsc.gov.in என்ற இணையதளத்தில் காணலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நீட் வினாத்தாள் முன்கூட்டியே வெளியான வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 3 பேரை சிறையில் விசாரிக்க சிபிஐக்கு தில்லி நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இதுகுறித்து சிபிஐ-ன் மனுவை விசாரித்த நீதிபதி சுரேந்தர் மோஹித் சிங் இதற்கு அனுமதி அளித்தார்.

காணொலி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்ட எஞ்சிய **10** குற்றம் சாட்டப்பட்டவர்களின் நீதிமன்ற காவலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

நீட் வினாத்தாள் முன்கூட்டியே வெளியான வழக்கில் சிபிஐ **13** பேரை கைது செய்துள்ளது.

அவர்கள் அனைவரும் தற்போது நீதிமன்ற காவலில் உள்ளனர்.

<<<<>>>>

இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் மறு தேர்வு நடைபெறுவதையொட்டி, அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் தயார் நிலைகள் குறித்த உயர்நிலை ஆய்வுக் கூட்டத்தில் மத்திய உள்துறை செயலாளர் திரு. கோவிந்த் மோகன் பங்கேற்றார்.

அப்போது மாணவர்களுக்கான வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்டவற்றில் மாநில அரசின் ஏற்பாடுகள் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

பாதுகாப்பு நெறிமுறைகள் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு மாநில அரசுகள், யூனியன்பிரதேச அரசுகள் ஆகியவற்றுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை, உயர்கல்வித்துறை, அஞ்சல்துறை செயலாளர்கள், ஆயுதப்படை தலைமை இயக்குநர்கள்,

பாதுகாப்பு மற்றும் சுகாதார அமைச்சக உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா - இளையோர் நாடாளுமன்ற நிகழ்வை மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா இன்று தொடங்கி வைக்கிறார்.

ஜனநாயக நடைமுறைகள் மற்றும் நிர்வாகம் குறித்து இளையோர் புரிந்துகொள்ளுதல், கொள்கை விவாதங்கள், நாடாளுமன்ற நடவடிக்கைகள் குறித்து இளையோர் அறிந்துகொள்ளும் வகையில் இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

<<<<>>>>

சர்வதேச யோகா தினத்திற்கான முன்னோட்ட நிகழ்ச்சியை மத்திய ஆயுஷ் அமைச்சகம் புதுதில்லியில் நேற்று நடத்தியது.

இதில் பங்கேற்றுப் பேசிய மத்திய ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு. பிரதாப்ராவ் ஜாதவ், நடப்பாண்டு யோகா தினம் ஆரோக்கியமான முதுமைக்கான யோகா என்ற தலைப்பில் நடைபெற உள்ளதாகத் தெரிவித்தார்.

கொல்கத்தாவில் இம்மாதம் 21ஆம் தேதியன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற உள்ள சர்வதேச யோகா

தின நிகழ்வையொட்டி முன்னோட்ட நிகழ்ச்சி நடைபெற்றதாக அவர் கூறினார்.

மக்கள் முன்பை விட நீண்டகாலம் வாழ்வதாக குறிப்பிட்ட அவர், இக்கால கட்டத்தில் ஆரோக்கியம், செயல்பாடு, சுயசார்பு ஆகியவற்றை உறுதி செய்வதே உண்மையான சவாலாகும் என்று தெரிவித்தார்.

உடல் ஆரோக்கியத்தை வலுப்படுத்துதல், மனநலனை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் முதுமைக் காலத்தில் உரிய முறையில் வாழ்வதற்கான வழிவகையை யோகா கற்றுத் தருவதாக திரு. பிரதாப்ராவ் ஜாதவ் கூறினார்.

<<<<>>>>

அமெரிக்காவில் தெற்கு கலிஃபோர்னியாவின் மொஜாபேயில் உள்ள விமானப்படைத் தளத்தில் இருந்து புறப்பட்ட போர் விமானம் சிறிது நேரத்திலேயே விபத்திற்குள்ளானது. இதில் பயணம் செய்த 8 பேரும் உயிரிழந்தனர்.

மீட்புப் பணி நடைபெற்று வருவதாக அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது.

விபத்திற்கான காரணம் உடனடியாக தெரியவில்லை என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

ஃபிரான்ஸ் நாட்டின் **Evian** நகரில் நடைபெற்று வரும் **G-7** உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.

“புதிய கூட்டாண்மைகளை உருவாக்குதல், சர்வதேச ஒற்றுமையை மீண்டும் கட்டமைத்தல்” என்ற தலைப்பில் நடைபெறும் அமர்வில் அவர் பங்கேற்க உள்ளார்.

இதில் **G-7** நாடுகளின் தலைவர்கள், கூட்டாண்மை நாடுகளின் தலைவர்கள், உலக வங்கி மற்றும் ஆப்பிரிக்க வளர்ச்சி வங்கிப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இம்மாநாட்டிற்கு இடையே கனடா, பிரிட்டன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

அதைத் தொடர்ந்து பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன் அளிக்கும் விருந்திலும் பிரதமர் பங்கேற்க உள்ளார்.

**G-7** உச்சிமாநாட்டில் உலகில் நிலவும் சமநிலையின்மை, புவி அரசியல் நெருக்கடிகள், குழந்தைகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத்

தீர்வு காண்பது உள்ளிட்டவை குறித்து தலைவர்கள் விவாதிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

தரையில் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணை சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் வெற்றிகரமாக மேற்கொண்டது.

ஒடிசா கடற்கரையில் உள்ள டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் தீவில் இருந்து இந்த சோதனை நடத்தப்பட்டது.

சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை தளத்தில் இருந்து பெறப்பட்ட தரவுகளின்படி இந்த சோதனையின் நோக்கம் முழுமையாக நிறைவேற்றப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த ஏவுகணை சோதனை வெற்றிக்காக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன அதிகாரிகளுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அமெரிக்கா - ஈரான் இடையேயான மோதலை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் முறைப்படி ஸ்விட்சர்லாந்தின் ஜெனிவாவில் வரும் 19ஆம் தேதி கையெழுத்தாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் மின்னனு முறையில் ஏற்கனவே கையெழுத்திடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பதற்கும், கடல் வழிப் போக்குவரத்தை தொடங்குவதற்கும், ஈரானின் அணுசக்தி திட்டம் மற்றும் தீர்வு காணப்படாத பிரச்சினைகள் குறித்து இரண்டு மாத கால பேச்சுகளை தொடங்குவதற்கு வழிவகை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முறைப்படி ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு அதன் விவரங்கள் வெளியிடப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் சுங்கக் கட்டணமின்றி கப்பல்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்துகிறது.

எனினும் எதிர்காலத்தில் கட்டணங்கள் விதிக்கப்படுவது குறித்து பரிசீலிக்கப்படலாம் என்று ஈரான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒரு நடவடிக்கையாக இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளதாக ஈரான் அதிபர் திரு. மசூத் பெசஷ்கியான் தெரிவித்துள்ளார்.

ஆனால் இறுதி ஒப்பந்தம் இன்னும் எட்டப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிஹார், கேரளம் மற்றும் நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் இன்று கனமுதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ராஜஸ்தானின் மேற்குப் பகுதியில் கனமழை பெய்யும் என்று கூறியுள்ளது.

ஹரியானா, சண்டிகட், தில்லி, பஞ்சாம், ஜம்மு-கஷ்மீர், லடாக், சத்தீஸ்கட், கர்நாடகா, மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகளில் அடுத்த 3 நாட்களில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்பெயின் - **Cape Verde** அணிகளுக்கு இடையேயான ஆட்டம் கோலின்றி டிராவில் முடிந்தது.

பெல்ஜியம் - எகிப்து மற்றும் சவுதி அரேபியா - உருகுவே அணிகளுக்கு இடையேயான போட்டி டிராவில் முடிவடைந்தது.

-------------

லண்டனில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி - நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<The End>>>>**